# February 3, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. இந்தியாவுடனான வர்த்தக ஒப்பந்தத்துக்கு அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒப்புதல் தெரிவித்தார்.

(i) இந்திய பொருள்கள் மீது விதிக்கப்பட்டிருந்த 25 சதவீத வரியை 18 சதவீதமாக குறைப்பதாகவும் டிரம்ப் தெரிவித்தார்.

(ii) இதைத் தொடர்ந்து, அமெரிக்காவுக்கு எதிரான வரி மற்றும் வரி அல்லாத தடைகளை பூஜ்ஜியமாக குறைக்க இந்தியா முன்வரும் என எதிர்பார்பதாக டொனால்ட் டிரம்ப் தெரிவித்தார்.

2. மாமல்லபுரத்தில் சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம் அமைத்து, ரூ.100 கோடியில் சர்வதேச தரத்திலான உள்கட்ட மைப்பு வசதிகள் உருவாக்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாடு 2026-ஐ தொடங்கிவைத்து முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

(i) தமிழ்நாட்டில் கரகாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், தெருக்கூத்து, தப்பாட்டம், பரதநாட்டியம், நமது பண்பாட்டு அடையாளமான ஏறு தழுவுதல் உள்ளிட்ட விளையாட்டுகளும் சுற்றுலாப் பயணிகளின் கவனத்தை ஈர்த்திருக்கின்றன. இந்தக் கலைகளையும், கலைஞர்களையும், நம்முடைய பண்பாட்டையும் உலக அளவில் கொண்டுசேர்க்கும் வலிமை, சுற்றுலாத் துறைக்குதான் இருக்கிறது.

(ii) தமிழக சுற்றுலாத் துறையின் சாதனைகளாக, கீழடி அருங்காட்சியகம், பொருநை அருங்காட்சியகம், கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம், கன்னியாகுமரியில் உள்ள திருவள்ளுவர் சிலைக்கு கண்ணாடிப் பாலம் என ஏராளமான திட்டங்கள் இருக்கின்றன. ஐந்து ஆண்டுகளில், சுற்றுலாத் துறையின் மேம்பாட்டுக்காக ரூ.612.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

(iii) கடந்த ஐந்தாண்டுகளில், 128.97 கோடி உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளும், சுமார் 45 லட்சம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளும் தமிழ்நாட்டுக்கு வந்துள்ளனர்.

(iv) மூன்று அறிவிப்புகள்:

- உலக சுற்றுலா வரைபடத்தில் கலை மற்றும் பண்பாட்டு சுற்றுலாத் தலமாக தமிழ்நாடு இடம்பெற, முதல்முறையாக, அடுத்த ஆண்டு ஜனவரியில் பிரம்மாண்ட நிகழ்ச்சி நடத்தப்படும்.
- சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளை மேம்படுத்த மாமல்லபுரத்தில் 'சிறப்புப் பகுதி மேம்பாட்டு ஆணையம்' அமைத்து, அதன் மூலமாக, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், உலகத்தரத்தில் நவீன சுற்றுலா உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும்.
- 2023-ஆம் ஆண்டு சுற்றுலாக் கொள்கை அறிவிப்பை அடிப்படையாகக் கொண்டு, சிப்காட் நிறுவனம் சுற்றுலாத் தலங்களைக் கண்டறிந்து, முதலீடுகளை ஈர்த்து, புதிய சுற்றுலா வசதிகளை உருவாக்கவுள்ளது.
- இதன் முதல்கட்டமாக, கன்னியாகுமரி, கள்ளக்குறிச்சி, ஈரோடு மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்டங்களில் நான்கு சிறப்பு சுற்றுலா இடங்கள் அடையாளம் கண்டறியப்பட்டு, முதலீடுகளை ஈர்க்க விருப்பப் பதிவு கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருக்கின்றன.
- அடுத்து, இரண்டாம் கட்டமாக தமிழ்நாடு முழுவதும் 31 இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றன. இவை, நகர்ப்புற சுற்றுலா, சிறப்பு அனுபவ சுற்றுலா, பெரிய சுற்றுலா மையங்கள் என்று பிரிக்கப்பட்டு, இதில் தங்குமிடங்கள், தீம் பார்க்குகள், கேம்பிங் சைட்ஸ், இயற்கை அனுபவத் தங்குமிடங்கள் ஆகியவை ஏற்படுத்தப்பட உள்ளன. இதனால், தமிழ்நாடு முழுவதும் பல லட்சம் பேருக்கு வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றார் முதல்வர் ஸ்டாலின்.

(v) ரூ.22,794 கோடியில் 127 ஒப்பந்தங்கள்

- தமிழ்நாடு உலகளாவிய சுற்றுலா உச்சி மாநாட்டில் ரூ.22,794.78 கோடி உறுதியளிக்கப்பட்ட முதலீடு மற்றும் 65,937 பேருக்கு உறுதியளிக்கப்பட்ட வேலைவாய்ப்பு என்ற வகையில் 127 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டன.
- இவை பாரம்பரிய சுற்றுலா, சாகச சுற்றுலா, எம்ஐசிஇ சுற்றுலா, சூழல் சுற்றுலா போன்ற பல்வேறு சுற்றுலாப் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட உள்ளன.
- மேலும், மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார், கடலூர் மாவட்டம் சிதம்பரம், செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரம் ஆகிய இடங்களில் மொத்தம் ரூ.40.25 கோடியில் முடிவுற்ற 3 சுற்றுலா மேம்பாட்டுப் பணிகளை முதல்வர் ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்துவைத்தார்.
- மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் ரூ.5 கோடியில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 'ஹோட்டல் தமிழ்நாடு' அமைக்கும் பணி மற்றும் தரங்கம்பாடியில் ரூ.3 கோடியில் நடைபாதை, வாகன நிறுத்துமிடம், நுழைவுக் கட்டணம் வழங்குமிடம், மின்சார அறை, சுகாதார வளாகம் உள்ளிட்ட சுற்றுலா வளர்ச்சிப் பணிகள் என மொத்தம் ரூ.8 கோடியில் புதிய திட்டப் பணிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

3. 2026-2027 நிதியாண்டுக்கான மத்திய பட்ஜெட்டில் தமிழக ரயில்வே திட்டங்களுக்காக ரூ.7,611 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைணவ் தெரிவித்தார்.

(i) நிதிநிலை அறிக்கைதிட்டங்களின்படி தமிழகத்தில் புதிதாக இரண்டு புல்லட் ரயில் வழித்தட திட்டங்கள் தொடங்கப்பட உள்ளன. சென்னை - பெங்களூரு இடையே ஒரு வழித்தடம், சென்னை - ஹைதராபாத் இடையே இரண்டாவது வழித்தடம் அமைக்கப்படும்.

(ii) இவை மணிக்கு அதிகபட்சமாக 350 கிலோ மீட்டர் வேகத்தில் இயங்கும் வகையில் வடிவமைக்கப்படும். இந்த வழித்தடங்கள் மும்பை - அகமதாபாத் புல்லட் ரயில் வழித்தடம் போன்று மேம்பால ரயில் வழித்தடமாக இருக்கும். புல்லட் ரயில் வழித்தட திட்டப் பணிகள் விரிவான திட்ட அறிக்கைக்குப் பிறகு தொடங்கும்.

(iii) பெங்களூரு மேலும், சென்னை இடையே ரயில் பயண நேரம் 1 மணி 13 நிமிஷமாகவும், சென்னை - ஹைதராபாத் இடையே பயண நேரம் 2 மணி 55 நிமிஷமாகவும் இருக்கும். இது மிகப்பெரிய பொருளாதார வழித்தடமாக இருக்கும்.

4. என் கனவு- என் எதிர்காலம் என்ற திட்டத்தை விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் பகுதியில் புதன்கிழமை (பிப்.4) முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார்.

(i) தமிழகம் முழுவதும் 2025, ஜூலை மாதத்தில் தொடங்கப்பட்ட 'உங்களுடன் ஸ்டாலின் முகாம்' தொடர்ந்து பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்டது. மொத்தமாக 10 ஆயிரம் முகாம்கள் நடத்தப்பட்ட நிலையில், அந்த முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் அடிப்படையில் 1.80 லட்சம் பயனாளிகளுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டப் பயன்கள் வழங்கும் விழா, 'என் கனவு -என் எதிர்காலம்' இணையதள தொடக்க விழா மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் முடிவுற்ற பணிகள் தொடக்க விழா மற்றும் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழா புதன்கிழமை (பிப்.4) நடைபெறவுள்ளது.

5. மத்திய அமெரிக்க நாடான கோஸ்டா ரிகாவில் நடைபெற்ற அதிபர் தேர்தலில், ஆளுங்கட்சி வேட்பாளர் லாரா ஃபெர்னாண்டஸ் 48.9 சதவீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.

(i) அந்நாட்டு சட்டப்படி, ஒரு அதிபர் வேட்பாளர் முதல் சுற்றிலேயே வெற்றி பெற 40 சதவீத வாக்குகள் போதுமானது என்பதால், ஏப்ரலில் நடைபெறவிருந்த 2-ஆம் கட்டத் தேர்தல் தவிர்க்கப்பட்டுள்ளது. இவரை எதிர்த்துப் போட்டியிட்ட பொருளாதார நிபுணர் ஆல்வாரோ ராமோஸ் 33 சதவீத வாக்குகளுடன் தோல்வியைத் தழுவினார். அவர் தனது தோல்வியை ஏற்றுக்கொண்டதோடு, புதிய அரசுக்கு 'ஆக்கபூர்வமான' எதிர்க்கட்சியாக இருந்து செயல்படுவோம் என்றும் அறிவித்துள்ளார்.

(ii) தற்போதைய அதிபர் ரோட்ரிகோ சாவேஸின் தீவிர ஆதரவா ளரான 39 வயது லாரா ஃபெர்னாண்டஸ், ஏற்கெனவே திட்டமிடல் மற்றும் அதிபர் துறை அமைச்சராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர்.

(iii) அதிபர் தேர்தலோடு சேர்த்து அந்நாட்டின் 57 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கும் தேர்தல் நடைபெற்றது. இதில் லாரா ஃபெர்னாண்டஸின் கட்சி 30 இடங்களைக் கைப்பற்றி பெரும்பான்மை பெற்றுள்ளது.

(iv) இருப்பினும், நாட்டின் அடிப்படை சட்ட அமைப்பை மாற்றி, அவர் குறிப்பிட்ட 'மூன்றாவது' குடியரசை உருவாக்க 38 இடங்கள் (அறுதிப் பெரும்பான்மை) தேவை. உச்சநீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பது போன்ற அதிகாரம்மிக்க முடிவுகளை எடுப்பதிலும் அவர் மற்ற கட்சிகளின் ஆதரவை நாட வேண்டியிருக்கும்.

6. திபெத்திய பௌத்த மதத் தலைவர் தலாய் லாமாவுக்கு, சிறந்த ஒலிப்புத்தகம் பிரிவில் 'கிராமி' விருது வழங்கப்பட்டுள்ளது.

(i) 'இந்த விருது அரசியல் உள்நோக்கம் கொண்டது' என்று சீனா விமர்சித்துள்ள நிலையில், 'இது மனிதாபிமானத்தின் கூட்டுப்பொறுப்புக்குக்கிடைத்த அங்கீகாரம்' என தலாய் லாமா நெகிழ்ச்சியுடன் தெரிவித்துள்ளார்.

(ii) அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சலீஸ் நகரில் நடைபெற்ற 68– ஆவது ஆண்டு கிராமி விருதுகள் வழங்கும் விழாவில், தலாய்லாமா (டென்சின் கியாட்சோ) தனது முதல் கிராமி விருதை வென்றார்.

(iii) அவரது 'மெடிடேஷன்ஸ்: தி ரிஃப்ளெக்சன்ஸ் ஆஃப் ஹிஸ் ஹோலினஸ் தி தலாய் லாமா' எனும் ஒலிப்புத்தகத்துக்காக (ஆடியோ புக்), 'சிறந்த கதை சொல்லல் மற்றும் ஒலிப்புத்தகம்' பிரிவில் இந்த விருது வழங்கப்பட்டது.

7. அமெரிக்காவில் நடைபெற்ற 'ஸ்குவாஷ் ஆன் ஃபையர் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அனாஹத் சிங் மகளிர் பிரிவில் சாம்பியன் ஆனார்.

8. அமெரிக்காவில் தமிழக காலநிலை விஞ்ஞானி வீரபத்ரன் ராமநாதனுக்கு (82) புவி அறிவியல் ஆய்வுக்காக உயரிய 'கிராஃபூர்ட்' பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. நோபல் பரிசளிக்கும் ஸ்வீடனின் ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாதெமி இந்தப் பரிசை அறிவித்துள்ளது.

(i) புவி அறிவியலுக்கான நோபல் பரிசு' என்று கருதப்படும் கிராஃபூர்ட் பரிசு, கரியமில வாயுவைவிட பூமியை மிகக் கடுமையாக வெப்பமயமாக்கும் காரணிகள், வளிமண்டல பழுப்பு நிற மேகங்கள் ஆகியவை குறித்து பல ஆண்டுகளாக ராமநாதன் மேற்கொண்ட ஆராய்ச்சியை அங்கீகரித்து அறிவிக்கப்பட்டுள்ளது.

(ii) கடந்த 1975-ஆம் ஆண்டு அமெரிக்காவின் விண்வெளி ஆராய்ச்சி அமைப்பான நாசாவில் ராமநாதன் பணியாற்றினார். அப்போது வளிமண்டலத்தில் கரியமில வாயுவை விட க்ளோரோஃபுளூரோ கார்பன்கள் (சிஎஃப்சி) 10,000 மடங்கு வீரியமாக வெப்பத்தை தேக்குவதாக கண்டுபிடித்தார். அவரின் ஆராய்ச்சி புவி வெப்பமயமாதல் குறித்த புரிதலை மாற்றியமைத்தது.

(iii) இதுகுறித்து ராயல் ஸ்வீடிஷ் அறிவியல் அகாதெமியிடம் அவர் கூறுகையில், '1975-ஆம் ஆண்டு வரை, புவி வெப்பமயமாதலுக்கு கரியமில வாயுதான் முக்கிய காரணம் என்று கருதினோம். ஆனால் சிஎஃப்சி குறித்து தெரியவந்த பின்னர், சுற்றுச்சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துவதில் மனிதர்களுக்கும், தொழில்நுட்பத்துக்கும் உள்ள ஆற்றலை அறிந்து அதிர்ச்சி ஏற்பட்டது' என்று தெரிவித்தார். இந்திய பெருங்கடல் ஆராய்ச்சியில் அவர் ஆற்றிய பணி மூலம், தெற் காசிய வளிமண்டலத்தில் பழுப்பு நிற மேகங்கள் குறித்து தெரியவந்தது. இந்த ஆராய்ச்சி இந்தியாவில் பருவமழை குறைதல், இமயமலை பனிப்பாறைகள் வேகமாக உருகுதல் ஆகியவற்றுடன் காற்று மாசை தொடர்புப்படுத்தியது.

(iv) வளிமண்டலத்துக்குள் தீங்கு விளைவிக்கும் கோடிக்கணக்கான டன் வாயுக்கள் ஊடுருவுவதை தடுக்கும் மான்ட்ரியால் ப்ரோடோகால் ஒப்பந்தம் உள்ளிட்ட முக்கிய சர்வதேச ஒப்பந்தங்களுக்கு அவரின் பணி அடித்தளமாக அமைந்தது.

9. தமிழ்நாடு உள்பட 8 மாநிலங் களில் 1.31 கோடி டன் மோனோசைட் கனிமம் இருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

(i) மோனோசைட் என்பது சிவப்பு-பழுப்பு நிற பாஸ்ஃபேட் கனிமமாகும். இது கனிம வளம் அதிகம் நிறைந்துள்ள கடலோர மணல் பரப்புகள், அனல் பாறைகளில் இருந்து முதன்மையாகப் பெறப்படுகிறது.

(ii) தமிழ்நாடு, கேரளம், ஆந்திரம், ஒடிஸா, மகாராஷ்டிரம்,குஜராத், ஜார்க்கண்ட், மேற்கு வங்கம் ஆகிய 8 மாநிலங்களின் கடலோர மணலில் 1.31 கோடி டன் மோனோசைட் இருப்பதாக அணு கனிமங்கள் தேடல் மற்றும் ஆராய்ச்சி இயக்குநரகம்(ஏஎம்டி) மதிப்பிட்டுள்ளது.

10. தமிழ்நாடு - கர்நாடகம் இடையேயான பெண்ணையாறு நீர்ப் பங்கீடு விவகாரத்துக்கு தீர்வு காண நடுவர் மன்றத்தை ஒரு மாதத்துக்குள் மத்திய அரசு அமைக்க வேண்டும் என உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்தது.

(i) முன்னதாக, தமிழ்நாடு - கர்நாடகம் இடையேயான பெண்ணையாறு நீர்ப்பங்கீடு தொடர்பான வழக்கு கடந்த 8 ஆண்டுகளாக உச்சநீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது. இந்த விவகாரத்தில் விதிகளை மீறி கர்நாடகம் செயல்படுவதாக உச்சநீ திமன்றத்தில் தமிழகம் வழக்கு தொடர்ந்தது.

(ii) 'யர்க்கோல் கிராமத்துக்கு அருகே பெண்ணையாற்றின் கிளை நதியான மார்க்கண்டேய ஆற்றின் குறுக்கே கர்நாடகம் சட்டத்துக்குப் புறம்பாக பெரிய அணைக்கான கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதனால், தமிழகத்தின் தண்ணீர் முற்றிலும் பறிக்கப்பட்டு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும்' என தமிழகம் முறையிட்டது.